
Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

25.04.2020 சனிக்கிழமை



## கொரோனா 420

- ஒரே நாளில் 52 பேர் அடையாளம்
- 116 பேர் குணமடைவு
- 297 பேர் சிகிச்சையில்
- 247 பேருக்கு தொற்று அறிகுறி

கொழும்பு, ஏப். 25
உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் இலங்கையிலும் தனது வீரியத்தை நாளுக்கு நாள் காட்டி வருகின்றது. இலங்கையில் இதுவரை 420 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நேற்று ஒரே நாளில் 52 பேர் புதிய தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளனர். நேற்றிரவு 10.30 மணிவரை

பக்.2

# 400 கடற்படையினருக்கு இன்று கொரோனா சோதனை

கொழும்பு, ஏப். 25
வெலிசறைக் கடற்படை முகாமைச் சேர்ந்த 70 சிப்பாய்கள் இது வரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள் ளாகியுள்ளனர். அவர்களில் முதல் கட்ட மாக 400 பேருக்கு இன்று சோத னைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பக்.2

## நாய்க்கு கொரோனா: வெறும் வதந்தியே!

கொழும்பு, ஏப்.25
கொரோனா தொற்றால் பாதிக்கப் பட்ட ஒருவர் அடையாளம் காணப் பட்ட ஜாஎல சுதுவெல பகுதியில் நாய் ஒன்றுக்கு கொரோனா தொற்று ஏற்ப்பட்டதாக வெளியா கும் தகவல்களில் எவ்வித உண்மை யும் இல்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

பக்.2

## 10 பேருக்கு பரவும்!

கொழும்பு, ஏப். 25
ஒரு கொரோனா தொற்றாளரிடம் இருந்து நாளொன் றுக்கு 10 பேருக்கு கொரோனா பரவ லாம் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. கொழும்பு பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் ஜெய ருவண் பண்டார இதனைத் தெரிவித்துள் ளார். நாட்டில் இது வரை 420 பேருக்கு கொரோனா தொற்றியுள் ளமை உறு திப்படுத்தப் பட்டுள்ளது. (த)



## நாடாளுமன்றத் தேர்தல் ஜூன் 20 இல் நடக்காது?

கொழும்பு, ஏப்.25
2020 ஜூன் 20 ஆம் திகதி நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தல் மேலும் ஒத்திவைக் கப்படக்கூடும் என அரசியல் வட்டா ரங்களில் இருந்து அறியமுடிகின் றது. 'கொரோனா' வைரஸ் பரவுவ தைக் கட்டுப்படுத்துவதற்காக அர சால் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மார்ச் 27 ஆம் திகதி நீக்கப்பட்ட பின்னர், ஒரு வாரத்துக்குள்

பக்.2

## தேர்தலுக்கான செலவை அதிகரித்தது கொரோனா!

### தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு

கொழும்பு, ஏப். 25
சுகாதாரத்துறையின் ஆலோசனை ளைப் பின்பற்றி பொதுத்தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள தால் தேர்தல் செலவு மேலும் அதிகரிக் கக்கூடும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு மதிப்பிட்டுள்ளது. சாதாரண சூழ்நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு குறைந்த பட்சம் 750 கோடி ரூபா செலவாகும் என்று தேர் தல் ஆணைக்குழு முன்னதாகக் கணிப் பிட்டிருந்தது. இதற்கான கோரிக்கை யும் திறைசேரியிடம் விடுக்கப் பட்டி ருந்தது. எனினும், கொரோனா வைரஸ் தாக்கத்தால், இந்த

பக்.2

## 19 மாவட்டங்களில் கொரோனா!

கொழும்பு, ஏப். 25
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கா கிய மாவட்டங்கள் 16 இலிருந்து 19ஆக உயர்ந்துள்ளது. வெலிசறை கடற்படை முகாமில் இருந்து விடுமுறையில் வீடு சென்ற சிப்பாய்களும் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகி வருவதால் அவர்களின் சொந்த மாவட் டங்களும் பாதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அநுராதபுரம், மொனராகலை மற்றும்

பக்.2

## பேராசிரியர் ஹூல் ஐ.தே.கவின் ஆள்!

### விளாசுகின்றார் மஹிந்தானந்த

கொழும்பு, ஏப். 25
ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையான அரசியல் நிகழ்ச்சி நிரலையே தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல்

பக்.2

## யாழிலிருந்து 2ஆயிரம் பேர் சொந்த மாவட்டங்களுக்கு!

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் பல்வேறு கார ணங்களுக்காக வருகை தந்த வெளி மாவட் டங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம்

பக்.2

## பாடசாலைகள் திறப்பதையும் பரீட்சைகளையும் ஒத்தி வைக்கவும்

### மாவை. எம்.பி, அமைச்சர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
ஏ.எல். பரீட்சை மற்றும் தரம் 5 மாணவர்க ளுக்கான புலமைப் பரிசில் பரீட்சைகள் என்பவற்றை ஒத்திவைக்குமாறும், பாடசாலை கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீள ஆரம் பிப்பதை தள்ளிப் போடுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும், இலங்கைத்

பக்.2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# கொரோனா 420...

49 பேரும், அதன்பின்னர் இரவு 11.50 மணியள வில் மேலும் மூவரும் கொரோனாத் தொற் றுக்கு இலக்காகியுள்ளனர்.
இதுவரை நாளிலும் நேற்றே அதிக கொரோனா நோயாளர்கள் இலங்கையில் பதிவாகியுள்ளனர்.
நேற்று அடையாளம் காணப்பட்ட 52 பேரில் 30 பேர் வெலிசறை கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்ப டைச் சிப்பாய்கள், 10 பேர் விடுமுறைக்காக வெலிசறை முகாமிலிருந்து வீடு சென்ற கடற்ப டைச் சிப்பாய்கள் (குருநாகல் 03, அனுராதபு ரம் 02, இரத்தினபுரி 01, பதுளை 01, மொன ராகலை 01, களுத்துறை 01, மாத்தளை 01), 11 பேர் பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த வர்கள், ஒருவர் மருதானையைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் (கொழும்பு டி சொய்ஷா வைத்தியசாலையில் நேற்று மாலை இவருக்குப் பிறந்த குழந்தை இறந்தது) என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித் தார்.
அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப் பட்டுள்ள 420 பேரில் தற்போது 297 நோயாளி கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 116 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் 07 பேர் மரணமடைந்துள்ளனர்.
இதேவேளை, மேலும் 247 பேர் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித் துள்ளது. (அ, 22)

# 400 கடற்படையினருக்கு...

இந்தத் தகவலை கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக் கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
"70 சிப்பாய்களில் முதல் இருவர் பொலனறுவை மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளிலும், 58 பேர் வெலிசறை கடற்படை முகாமுக்குள்ளும், 10 பேர் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றுள்ள நிலையிலும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இவர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட் டுள்ளனர். அனைவரும் வைத்தியர்களின் நேரடிக் கண் காணிப்பில் இருக்கின்றனர்" என்றார்.
இதேவேளை, வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 70 சிப்பாய்கள் கொரோனா தொற்றுடன் கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து, அந்த முகாமில் உள்ள அனைத்து சிப்பாய்களையும் கொரோனாச் சோதனைக்கு உட்ப டுத்த பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி 4 ஆயிரம் கடற்படை சிப்பாய்கள் பி.சி.ஆர். பரிசோத னைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். ஒரே இடத்தில் கூடுதல் எண்ணிக்கையாளருக்கு கொரோனா பரிசோ தனை நடத்தப்படுவது இதுதான் முதல் தடவையாகும் .
இதன் முதல் கட்டமாக 400 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளதா என்பதைக் கண்டறிய இன்று பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே இரண்டு தினங்களுக்கு முன்னர் பேலியகொடை மத்திய மீன் சந்தையில் 549 பேருக்கு இப்படியான சோதனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஒரேநாளில் 400 பேருக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்படுவ தால், இந்தச் சோதனை முடிவுகள் வெளிவரும் போது, கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது. (அ,22)

# நாய்க்கு...

மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் கே.கே சரத் இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார். அதேவேளை நாட்டில் விலங்குகளுக்கு கொரோனா தொற்று உண்டா என்பது தொடர்பில் சோதனை செய்வதற்கான உபகரணங்கள் நாட்டில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# 19 மாவட்டங்களில்...

மாத்தளை ஆகிய 3 மாவட்டங்களும் கொரோ னாவால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் புதிதாக இணைந்துள்ளன.
சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை யின் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 142 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 59 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 33 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத் தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 06 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 5 பேரும், கேகாலை மாவட்டத்தில் 04 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள னர். அத்துடன், மாத்தறை, அம்பாறை, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட் டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக் களப்பு, வவுனியா, பொலனறுவை, மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்க ளில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நுவரெலியா, அம்பாந் தோட்டை, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 06 மாவட் டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.
இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்க ளில் இருந்து 38 பேரும், வெளிநாட்டுப் பிரஜை கள் 03 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ,22)

# பேராசிரியர் ஹூல்...

செயற்படுத்திவருகின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினரும், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான மஹிந்தா னந்த அளுத்கமகே தெரிவித்தார்.
தேர்தல் ஆணைக்குழு அரசியல் நடத் துவதாக ஆளுங் கட்சியின் சில உறுப்பி னர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.
இது குறித்து தங்கள் நிலைப்பாடு என்னவென்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மஹிந்தானந்த மேற்கண்டவாறு கூறினார்.
தேர்தல் ஆணைக்குழுவில் ஹூல் என ஒரு உறுப்பினர் இருக்கிறார். அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கான அரசியலையே முழுமையாக முன்னெடுத்து வருகின்றார். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய சிறப்பாகச் செயற்படுகி றார். ஆனால், தேர்தலை வைக்க வேண்டாம் என்று சக உறுப்பினர் ஹூல் நீதிமன்றம் செல்கிறார். இதன் நோக்கம் என்ன? தேர்தல் ஆணைக் குழு என்பது சுயாதீனமாக இயங்க வேண்டும். மக்கள் பக்கம் நின்று, அரசமைப்பின் பிரகாரம் தீர்மா னங்களை எடுக்கவேண்டும். என்றும் அவர் கூறினார். (த-44)

# யாழிலிருந்து 2ஆயிரம் பேர்...

பேர் தங்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு திரும்புவ தற்கு விண்ணப்பித்திருந்த நிலையில், கடந்த 5 நாள்களில் மாத்திரம் 2 ஆயிரம் பேர் சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பியுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப் பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயல கத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே மேற்கண் டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த 20ஆம் திகதி தொடக்கம் இன்றைய நாள் வரையில் பிற மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களுக் குச் செல்ல அனுமதிக்கு விண் ணப்பித்திருந்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்க ளில் சுமார் 2 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட் டுள்ளனர். அத்தியாவசியமாக செல்ல வேண்டியவர்களே அனுப்பப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக சிலர் அனுப்பப்பட வுள்ளனர். என்றார். (ஓ,5)

# நாடாளுமன்றத் தேர்தல்...

சாதாரணதொரு நிலை ஏற்படும் என்ற ஊகத்தின் அடிப்படையிலேயே தேர்த லுக்கான திகதியை ஆணைக்குழு நிர்ணயித்திருந்தது. எனினும், கொரோனா இன்னும் கட்டுக்குள் வரவில்லை. வேக மாகப் பரவக்கூடிய அபாய நிலை இருக் கின்றது. எனவே, தேர்தலை முன்னிட்டு சிறு அளவிலான கூட்டங்களை நடத்துவ தற்கான சூழ்நிலை கூட உருவாகவில்லை என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.
எனவேதான் தேர்தல் மேலும் பிற்போடப்படக்கூடும் என தெரியவரு கின்றது. ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் அறிவித்திருந்தாலும், சூழ்நி லைக்கேற்ப முடிவு மாற்றப்படும் என்ற தகவலையும் அண்மையில் வெளியிட்டி ருந்தார். இந்த நிலையில் மே 4 ஆம் திகதி புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்படும் - என எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-44)

# பாடசாலைகள்...

தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா, கல்வி அமைச்சர் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஆகியோ ரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.
அவர்கள் இருவருடனும் நேற்றும், இன்றும் தொலைபேசியூடாக பேச்சு நடத்தியபோதே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத் துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:
நேற்று மாலையில் உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடனும் இன்று காலை கல்வி அமைச்சர் டலஸ் அழகப் பெருமவுடனும் தொலைபேசி ஊடாகப் பேச்சு நடத்தினேன். பரீட்சைகள் நடத்து வது தொடர்பிலும், பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் திறப்பது பற்றியும் விரிவாகப் பேசியிருந்தார்கள். கொரோனா வைரஸ், ஊரடங்கு நிலமைகள் பற்றியும் விவரங்களைக் கேட்டறிந்தனர்.
உலகம் முழுவதும், இலங்கையிலும் கொரோனா வைரஸ் பற்றி இணையத்த ளங்கள், பத்திரிகைகள், செய்திகள் நாள் முழுவதும் கேட்பதும், பார்ப்பதுமே மாணவர்களின் இப்போதைய முழுநாள் நிகழ்ச்சிநிரலாக இருக்கிறது. இதனால் உளவியல் ரீதியாக மாணவர் சமூகம் நிச்சயம் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையே இருக்கிறது. நாடு முழுவதும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வரும் இராணுவத் தினரிடையேயும் கடற்படையினரிடமும் கொரோனா வைரஸ் பரவி விட்டது.
இந் நிலையில் பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் திறக்கப்படுவதையும் மாணவர் களுக்கான பரீட்சைகள் நடத்துவதையும் ஒத்திவைக்க வேண்டும். இவ்வாண்டு இறுதி வரை மருத்துவ நிபுணர்களின் ஆய்வுகள், அறிவுறுத்தல்களை அறிந்து பின்பற்றி கல்வி நிறுவனங்களை ஆரம் பிப்பதையும் பரீட்சைகளையும் மேற் கொள்ளலாம். கல்வி நிபுணர்கள், தமிழர் ஆசிரிய அமைப்புக்கள் பரீட்சைகளைப் பிற்போடும்படியே கேட்டுள்ளனர். அவர் களுடனும் கூடி ஆராய்ந்து பொருத்த மான கல்வி நடவடிக்கைகளை மேற் கொள்ளுங்கள் என்று கல்வி அமைச்சர்க ளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.
அமைச்சர்களும் இவ்வேண்டுகோளை ஏற்று இணக்கம் தெரிவித்துள்ளனர்.
முதலில் 2020 மே மாதம் முதல் ஒகஸ்ட் மாதங்களுக்கிடையில் பல்கலைக்கழகங் கள், பாடசாலைகள், சிறுவர் பள்ளிகள், கல்விக் கட்டமைப்பிலுள்ளோர் மட்டத் தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப் படுவது அவசியமானதாகும் என வற்பு றுத்துகின்றேன்- என்றுள்ளது. (ஓ,5)

# தேர்தலுக்கான...

முறை சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்தே பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
இதன்படி சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு வாக்களிப்பு நிலை யங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளது என்பதுடன் பாதுகாப்புப் பணிகளுக்கு மேலதிக பொலிஸாரையும் ஈடுபடுத்த வேண்டி யுள்ளது. அத்துடன், தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக் கான முகக்கவசம், கைக்கவசம் உட்பட மேலும் பல தேவைகளுக்கும் நிதி ஒதுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வாக்காளர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான திட்டத்துக்கும் நிதி ஒதுக்க வேண்டிவரும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-44)

# கொரோனா வைரஸ் குருதியையும் தாக்கும்



## மருத்துவர்கள் தகவல்

கொழும்பு, ஏப்.25

கொரோனா வைரஸ் முதலில் தொண்டை மற்றும் நுரையீரலில் புகுந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதன்பின் மற்ற உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் கொரோனா வைரஸ் குருதியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க்கில் உள்ள மவுண்ட்சினானை மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளில் சிலரின் பல்வேறு உறுப்புகளில் குருதி கட்டியாவதைக் கண்டறிந்துள்ளனர். சிலருக்கு சிறுநீரகம், நுரையீரல், மூளை உள்ளிட்ட உடல் உறுப்புகளில் ரத்த கட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே போல் சில நோயாளிகளின் நுரையீரலில் குருதி இல்லாமல் இருப்பதையும் கண்டுபிடித்துள்ளனர். மூளைகளில் குருதிக் கட்டுகளால் ஏற்படும் அடைப்பு இளம் நோயாளிகளுக்கும் ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர். கொரோனா வைரஸ் நோய் என்பது நுரையீரலையும் தவிர்த்து மற்ற உறுப்புகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் நோயாக இருக்கக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# குழியில் வீழ்ந்து முதியவர் சாவு!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப்.25



நீர்ப்பாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. வவுனியா, பாரதிபுரம் பகுதியில் நீர்ப்பாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்தே ஜெயபத்ம புலேந்திரன் (வயது 68) என்ற முதியவர் நேற்று உயிரிழந்தார்.

வவுனியா, பாரதிபுரம் வீதியில் தற்காலிகமாக வசிக்கும் அவர் வீட்டில் இருந்து இரவு தங்குவதற்காக கற்பகபுரம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் பயணித்தார். அப்போது மன்னார் பிரதான வீதிக்கு அண்மித்ததாக பாரதிபுரம் வீதியின் ஓரமாக பேராறு நீர்ப்பாசன நடவடிக்கைக்காக வெட்டப்பட்ட குழி ஒன்றில் துவிச்சக்கர வண்டியுடன் வீழ்ந்துள்ளார். நேற்றுக் காலை வீதியால் சென்றவர்கள் சம்பவத்தை அவதானித்து வவுனியாப் பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு தந்த பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப18)

# வீடுகளுக்குள் முடங்கியுள்ள மாணவருக்கு நேரலைக் கற்றல்

## மட்டக்களப்பில் அறிமுகம்

மட்டக்களப்பு, ஏப்.25



கொரொனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள மாணவர்களுக்காக நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் நேரலை ஊடான கற்பித்தலை மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனை மேற்கொள்ளவுள்ளது.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் கல்விச் செயற்பாடுகளை தற்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் முன்னெடுப்பதற்காக கல்வித் திணைக்களத்தால் நவீன தொழிநுட்பத்தின் உதவியுடன் நேரலை ஊடான கற்பித்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதை மேலும் வினைத்திறனுடனும், சகல வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கம் வகையிலும் விசேடமாக இந்த வருடம் 2020ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கும், கல்வி பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகளின் கூட்டு முயற்சியில் நிகழ்நிலை பரீட்சைகள், சமூக ஊடகங்கள் ஊடாக காணொளிக் கற்பித்தல் செயற்பாடுகள், குழுக்களூடாக அலகு ரீதியான செயலட்டைகள், பரீட்சை வினாத்தாள்கள் போன்றவற்றை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கபடவுள்ளன. இணைய வசதிகள் இல்லாத மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட செயலட்டைகளையும் மாதிரி வினாத்தாள்களையும் அவற்றுக்கான விடைகளையும் பாடசாலைகளுகளுக்கு ஊடாக வழங்கும் செயற்பாடுகளும் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய பிள்ளைகள் வீடுகளிலேயே முழுமையாக தங்கி வாழும் இன்றைய கால கட்டத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான ஆசிரியர்களாக வழிகாட்டிகளாக மாறி சற்று அதிகமான கரிசனையுடன் பங்களிப்புச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. (ப)

# விபத்தில் சாவு

பதுளை, ஏப்.25

பதுளை - மகியங்கனையில் பயணித்த மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகி, மரமொன்றுடன் மோதி, விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கந்தகெட்டிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான டபிள்யு. எம். கருணாதிலக்க (வயது 49) என்பவரே விபத்தில் உயிரிழந்தார். (த)



# ஒன்று கூடிய பக்தர்கள் பொலிஸாரால் அகற்றம்

பருத்தித்துறை, ஏப். 25

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் ஒன்று கூடிய பக்தர்கள் சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸாரால் நேற்று அப்புறப்படுத்தப்பட்டனர்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் வழிபாட்டுத் தலங்களில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் தினசரி பூஜைகள் அடியார்கள் பங்குபற்றாத நிலையில் மணி அடிக்காமல் பூசகர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு மாதமாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் வழிபாட்டுத் தலங்களில் பூஜைகள் நடைபெறுவது குறைவடைந்திருந்தன. நேற்று சித்திரைப் பரணி என்பதாலும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்ததாலும், நூற்றுக்கணக்கான பக்தர்கள் செல்வச் சந்நிதி கோவிலில் ஒன்றுகூடி வழிபட்டனர்.

இந்தத் தகவல் பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினருக்குக் கிடைத்தது. கோவிலுக்குச் சென்ற சுகாதாரப் பகுதியினர் பக்தர்கள் பலரும் முகக்கவசமின்றி நின்றிருந்தமையைக் கண்டனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற முகக்கவசம் அணியுமாறு கூறியும் பக்தர்கள் கண்டுகொள்ளாது வழிபடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். அதனால் பொலிஸார் அழைக்கப்பட்டு பக்தர்கள் அகற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நேபாளத்தில் இருந்து 93 பேர் இலங்கைக்கு

கொழும்பு, ஏப்.25

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிலிருந்து 93 இலங்கை மாணவர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலையடுத்து, சர்வதேச ரீதியான விமானப் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டன. அதையடுத்து வெளிநாடுகளில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் நாடு திரும்ப முடியாத நிலையேற்பட்டது.

தற்போது ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல் 1425 எனும் இலக்க விமானத்தில் நேபாளத்தின் காத்மண்டுவில் தங்கியுள்ள 93 மாணவர்கள் நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மே 30 தேர்தலை நடத்த முயன்ற மஹிந்த தேசப்பிரிய

யாழ்ப்பாணம், ஏப். 25

நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியை தீர்மானிப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையே மிக நீண்ட விவாதம் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் இரண்டு உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் கடந்த 20ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் மற்றும் அபயசேகர ஆகியோர் தெரிவித்துள்ளனர். ஆணைக்குழுவின் தவிசாளர் அதற்கு மறுத்துள்ளார். தற்போதுள்ள நிலைமை மாற்றமடைவதற்கு நீண்ட காலம் தேவைப்படும் என்பதன் அடிப்படையிலும், எட்டாவது நாடாளுமன்றத்தின் 5 ஆண்டுகள் பதவிக் காலம் செப்ரெம்பர் மாதம் நிறைவடைவதன் அடிப்படையிலும் செப்ரெம்பர் 2ஆம் திகதி தேர்தலை நடத்தும் யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆணைக்குழு தவிசாளர் அதற்கு உடன்பட மறுத்து ஜூலை 15ஆம் திகதி தேர்தலை நடத்தலாம் என்ற யோசனையை முன்வைத்துள்ளார். ஆணைக்குழுவின் ஏனைய இரு உறுப்பினர்களும் அதற்கு இணங்கியுள்ளனர். இதனையடுத்து வர்த்தமானியை வரையும் பணிகளை ஆணைக்குழு தவிசாளர் முன்னெடுத்துள்ளார்.

சிங்கள மொழியில் வரையப்பட்ட வர்த்தமானியை பார்வையிட்டு அபயசேகர ஒப்புதல் வழங்கியுள்ளார். அது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலிடம் ஒப்புதலுக்கு வழங்கப்பட்டது. இதன்போது தேர்தல் நடைபெறும் திகதியாக மே மாதம் 30ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் மற்றொரு உறுப்பினரான அபயசேகரவிடம், மே 30 இற்கா நீங்களும் ஒப்புதல் வழங்கியுள்ளீர்கள் என்று கேட்டுள்ளார்.

இதன் பின்னரே அவருக்கும் விடயம் தெரியவர ஆணைக்குழுத் தவிசாளரிடம், நாங்கள் ஜூலை 15ஆம் திகதிக்குத்தான் இணக்கம் தெரிவித்தோம். மே 30 தேர்தலை வைக்க இணங்க முடியாது என்று தவிசாளரிடம் உறுப்பினர்கள் இருவரும் உறுதியாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் நடத்தலாம் என்று குறிப்பிட்ட ஆணையாளர், அதற்கு ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவரிடமும் சம்மதம் பெற்றுள்ளார். இதன் பின்னரே ஜூன் 20ஆம் திகதியைக் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியை வெளியிட்டது. (ஒ,5)

## வளர்ப்பு பிராணிகளுக்கு கொரோனா பரிசோதனை

கொழும்பு, ஏப்.25

இலங்கையில் கொரோனா வைரஸால் பீடிக்கப்பட்டவர்கள் உள்ள பகுதிகளில் வளர்க்கப்பட்டு வரும், செல்லப்பிராணிகளுக்கும் கொரோனாப் பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

இந்தத் தகவலை கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார். மனிதர்களிடமிருந்து மிருகங்களுக்கும் வைரஸ் பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.இதனை உறுதி செய்வது போல, ஜா எல பகுதியில் நாய் ஒன்றுக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. அதையடுத்தே இந்த நடவடிகை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தண்ணீர் விற்றவருக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.25

கொழும்பு புறக்கோட்டை தனியார் பஸ் நிலையத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை செய்த நபருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் நெருங்கிப் பழகிய யாசகர்கள், போதைப் பொருள் பாவனையாளர்கள் என 326 நபர்களை பொலிஸாரும், சுகாதார அதிகாரிகளும் தேடிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## தனிமைப்படுத்தல் நிலைய செயற்பாடு முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஏப்.25

புத்தளம் சாஹிரா கல்லூரியில் இயங்கிவந்த கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தின் செயற்பாடு நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

புத்தளத்தில் 'கொவிட் 19' தொற்றாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களில் 21 பேர் உறுதி செய்யப்பட்டு கொழும்பில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கப்பட்டனர். ஏனையோர் இங்கு அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் 3 வாரங்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் பின்னர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இன்றோடு நிறைவுக்கு வந்த சாஹிரா தனிமைப்படுத்தல் நிலைய வளாகம் சுத்திகரிப்பது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. (ஐ)

## மின் தாக்கி ஊழியர் சாவு

பதுளை, ஏப். 25

அதி சக்தி வாய்ந்த மின் கம்பியொன்றுடன் மரக் கூட்டுத்தாபன மரமொன்று மோதியதால் கடமையிலிருந்த மரக் கூட்டுத்தாபன ஊழியரொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

சம்பவம் ஹல்துமுள்ளையில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மரக் கூட்டுத்தாபன ஊழியரான எய்ச்.எம். ஆனந்த குமார என்பவரே உயிரிழந்தார்.

லொறியொன்றில் கொண்டு வரப்பட்ட மர வகைகளை, பிறிதொரு லொறியில் ஏற்றும் போது, மரமொன்று அதி சக்தி வாய்ந்த மின் கம்பியில் மோதியதால் மின் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## 'விரைவு எதிர்வினை ரைடர் குழு' தோற்றம்

கொழும்பு, ஏப். 25

அத்தியாவசிய சேவைகளுக்காக கொழும்புக்கு வருபவர்களுக்கு சீரற்ற வெப்பநிலை சோதனைகளை மேற்கொள்ள 20 உறுப்பினர்களைக் கொண்ட 'விரைவு எதிர்வினை ரைடர் குழு' (கியூ.ஆர்.ஆர்.டி) இராணுவம் ஆரம்பித்துள்ளது.

மிக ஆபத்தான கொழும்பு மாவட்டத்தில் கொரோனாவுக்கு எதிராக அரசின் தொடர்ச்சியான தடுப்பு பொறிமுறையை மேலும் வலுப்படுத்தும் முயற்சியில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா முன்மொழிந்த முயற்சியைத் தொடர்ந்து இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அசாதாரண வெப்பநிலையுடன் கூடிய நபர்களை இந்தப் பிரிவு கண்டறியும் என்று தெரிவிக்கப்பட்டது.

"வெப்பநிலை தொடர்பாக ஏதேனும் அவதானிப்பு ஏற்பட்டால், அவை விரைவாக ஏற்பாடுகளுக்காக மருத்துவ ஆலோசனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன" என்று லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார். (க)

## துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் ஆணின் சடலம்

குடாவோய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹாயாய எத்திலிவெ பகுதியில் வீடொன்றிலிருந்து, ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. எத்திலிவல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(க)

## இலங்கையர் ஒருவருக்கு மாலைதீவில் கொரோனா

கொழும்பு, ஏப்.25

மாலைதீவில் இலங்கையர் ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். மாலைதீவு சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

மாலைதீவில் நேற்று அடையாளம் காணப்பட்ட 6 தொற்றாளர்களில் மாலைதீவு, பங்களாதேஷைச் சேர்ந்த இருவரும், இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த தலா ஒருவருமாக இனங்காணப்பட்டுள்ளனர். மாலைதீவில் இதுவரை 116 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (க)





# வைரஸோடு வாழப்பழகுதல்

பிரான்ஸிலிருந்து
■ குமாரதாஸ்

வைரஸ் பரம்பலின் மூலஸ்தானம் என்று குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டப்படும் சீனாவின் வுஹான் பரிசோதனைக் கூடம் இதுதான். (Wuhan Institute of Virology)

அழகு பொலியும் வுஹான் நகரின் ஒதுக்குப்புறத்தில் காடுகள் போர்த்த மலைக்குன்றின் உச்சியில் 4 ஆயிரம் சதுரமீற்றர் பரப்பில் இதன் அமைவிடம். கொரோனோ வைரஸ் இங்கே இருந்துதான் வெளியே குதித்து உலகெங்கும் பரவியது என்று ஆதாரம் எதனையும் காட்டாமல் அமெரிக்க ஊடகங்கள் அலறியதால் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கின்ற ஒரு மையஸ்தானம் இது.

ஆயிரக்கணக்கில் கிருமிகளை சோதித்து அனுபவப்பட்ட இந்த ஆய்வகம் இப்படி ஒரு 'சோதனையை' இதற்கு முன் ஒருநாளும் எதிர்கொண்டதில்லை. கடந்த பல நாட்களாக அது மூடிக்கிடக்கிறது. உள்ளே பணிகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. வாயிலில் ஓர் அறிவிப்புப்பலகை மட்டுமே தொங்குகிறது.

அதில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

"வலுவான பாதுகாப்பு கட்டுப்பாடுகள் உள்ளன, பதற்றப்பட வேண்டாம்., அதிகாரபூர்வ அறிவுப்புகளை செவிமடுங்கள், அறிவியலை நம்புங்கள்., வதந்திகளைப் பரப்பாதீர்கள்!"

அங்குள்ள அதிகாரிகளை அணுகி என்ன நடந்தது என்பதைக் கேட்டறியச் சென்ற சர்வதேச செய்தியாளர் ஒருவர் மூடிய வாசலில் இந்தப் பலகையை மட்டுமே பார்த்துவிட்டுத் திரும்ப நேர்ந்தது. அங்கு பணியில் இருந்த நிபுணர்கள் பலரதும் கைத்தொலைபேசிகள் கடந்த பல நாட்களாக இயங்கவில்லை என்று கூறப்படுகிறது. சுட்டு விரல்கள் சீனாவை நோக்கியே நீள்வதால் வைரஸின் வடிவமாக இப்போது உலகின் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் இந்தக் கட்டடம் மட்டும்தான். ஆசியாவிலேயே மிகப் பெரிய 'வைரஸ் வங்கி' இதுதான் என்று சொல்லப்படுகிறது.

இங்கே சுமார் 1,500 ஆபத்தான கிருமிகளை பிடித்துவைத்து ஆராய்ச்சி நடத்துகின்ற விஞ்ஞானிகள் இன்று நேற்று மட்டும் அல்ல வாழ்க்கை பூராவுமே தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டவர்கள்.

'எபோலா' போன்ற மனிதரில் இருந்து மனிதருக்குப் பரவும் பயங்கர வைரஸ் வகைகள் இங்கே 'பி4' என்ற தனியான பிரிவில் (Class 4 pathogens) கடும் நுண்ணிய பாதுகாப்புக் கண்காணிப்புகளுடன் சோதிக்கப்படுகின்றன. ஆய்வு கூடத்தில் இருந்து வெளியேறும் காற்றுக் கூட வடிகட்டி சுத்திகரித்த பிறகே வெளியே அனுமதிக்கப்படுகிறது. உலகெங்கும் பி4(P4 ) என்கின்ற தொற்றும் நுண்ணங்கிகளைச் சோதிக்கும் சுமார் 30 ஆய்வுகூடங்கள் உள்ளன. அவற்றில் அரைவாசிக்கு மேல் அமெரிக்காவில் இயங்குகின்றன. ஆனால் ஆசியாவிலேயே மிகப் பெரியது இந்த வுஹான் ஆய்வுகூடம்தான்.

பிரான்ஸின் பிரபல நுண்ணுயிரியல் ஆய்வுகூடமான 'இன்சேர்ம்'நிறுவகமும் (Jean Mérieux Inserm laboratories) சீனாவின் வுஹான் ஆய்வுகூடமும் கூட்டுறவின் அடிப்படையில் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸின் நிபுணத்துவ உதவியுடன்தான் வுஹான் ஆய்வுக்கூடம் உருவாக்கப்பட்டது என்பது பலரும் அறிந்திராத புதிய தகவல். தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான இருநாட்டு ஒத்துழைப்புடன் கூடிய செயற்பாடுகளின் அடிப்படையில் வுஹான் ஆய்வுகூடத்தை நிறுவும் பணியில் பிரெஞ்சு நிபுணர்களும் பங்கு கொண்டனர் என்ற விவரம் இப்போது வெளியாகி உள்ளது. இதனால் தானோ என்னவோ வுஹான் ஆய்வு கூடத்தின் குறைபாடுகளைக் குறிப்பிட்டு குற்றம் சுமத்தும் விடயத்தில் பிரான்ஸ் சற்று 'அமுக்கி வாசிப்பது' தெரிகிறது. இருநாட்டு உறவுகளில் ஏற்பட்ட தோல்விகளால் தொற்றுநோய்கள் தொடர்பான பிரான்ஸ் சீன கூட்டுக் கமிட்டியின் கூட்டங்கள் எதுவும் கடந்த 2016 ஆம் ஆண்டுக்குப்பின் நடத்தப்படவில்லை என்கின்ற ஒரு தகவலும் உள்ளது.

இப்படி சர்வதேச பங்களிப்புகளில் இருந்து விலகி தனித்து இயங்கிய சீன ஆய்வு கூடத்தில் பல்வேறு பாதுகாப்புக் குறைபாடுகள் இருந்தன என்ற தகவல்களை அமெரிக்க ராஜதந்திரிகள் அடிக்கடி பரிமாறியிருக்கின்றனர். 2018 இல் சீனாவில் உள்ள அமெரிக்கத் தூதரக ராஜதந்திரிகள் இந்த ஆய்வு கூடத்துக்கு நேரடியாகச் சென்று குறைபாடுகள் இருப்பதைக் கண்டுபிடித்து தகவல் அனுப்பினர் என்று 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் இதனை சீனா அடியோடு மறுத்திருக்கிறது.

"ஆய்வு கூடத்தில் இருந்தே வைரஸ் தப்பியது என்று சொல்லப்படும் கருத்துகள் பொறுப்பற்ற வார்த்தைகள். கவனத்தை திசை திருப்பும் நோக்கில் பரப்பப்படுபவை. விவேகமுள்ள யாரும் இதனைப் புரிந்து கொள்வர்" என்று அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கிறார் சீன வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் ஸாஓ லியியன்(Zhao Lijian).

ஆனால் அமெரிக்க இராணுவமே சீனாவில் வைரஸைப் பரப்பியது என்று சில நாட்களுக்கு முன்னர் ஒரு கதையைக் கட்டவிழ்த்து



வுஹான் பரிசோதனைக்கூடம்



ஸீ ஷெங்லீ

விட்டவரும் இவரேதான். சீனாவில் வைரஸ் பரவத் தொடங்கியதும் உடனடியாகவே ஜனவரி 30 ஆம் திகதி அதன் மாதிரிகள் சோதனைக்காகத் தங்களிடம் தரப்பட்டன என்று வுஹான் ஆய்வு கூடத்தின் பணிப்பாளர்களில் ஒருவர் கூறுகிறார். அறியப்படாத அந்த வைரஸின் மரபணு வரிசையை தரம் பிரித்து அதுபற்றிய தகவல்களை பெப்ரவரி 2 ஆம் திகதி சேகரித்து 11 திகதியே தாங்கள் உலக சுகாதார அமைப்பிடம் வழங்கிவிட்டதாகவும் சொல்கிறார்.

வுஹான் ஆய்வு கூடத்தில் ஏற்கனவே உள்ள வைரஸ் மாதிரிகள் எதனுடனும் புதிய கொரோனா வைரஸ் ஒத்துப் போகவில்லை என்ற முக்கிய தகவலை ஆய்வாளரும் சீனாவின் முக்கிய நிபுணருமான ஸீ ஷெங்லீ(Shi Zhengli ) என்பவர் வெளியிட்டிருக்கிறார். அவரது இந்தக் கூற்று ஆய்வு கூடத்தில் இருந்துதான் வைரஸ் வெளிப்பட்டது எனக் கூறப்படுவதை மறுதலிக்கிறது.

பெரும்பாலான விஞ்ஞானிகள் கொரோனா வைரஸ் வெளவால்களில் இருந்து வேறு இடைநிலை உயிரினங்கள் வழியே மனிதனுக்குப் பரவியதாகவே நம்புகின்றனர். வுஹானில் உள்ள விலங்குச்சந்தையில்(wet market) இருந்துதான் முதலில் வைரஸ் மனிதர்களுக்குப் பரவியது என்பதே சீனாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஆனால் சீனாவின் பிறிதொரு விஞ்ஞானிகள் குழு நடத்திய ஆய்வில் அங்கு முதலில் தொற்றுக்கு இலக்காகியவர்களில் எவரும் சர்ச்சைக்குரிய வுஹான் சந்தையுடன் தொடர்பு எதனையும் கொண்டிராதவர்கள் என்பதைக் கண்டறிந்துள்ளது. இந்த விடயம் 'த லான்ஸ்ட்'(The Lancet )சஞ்சிகையில் வெளியாகியுள்ளது. இத்தகைய முரண்பட்ட தகவல்கள், ஆய்வு கூடத்தில் இருந்துதான் வைரஸ் பரவியிருக்கக் கூடும் என்று நம்புகின்ற தரப்புகளை வலுவாக்குகின்றன.

இதனை எழுதும் வரை சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேரைக் கொன்று, உலக பொருளாதாரத்தை அடியோடு சரித்துவிட்ட இந்த வைரஸ் தொற்றுக்கு யாரைப் பொறுப்பாளி ஆக்குவது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

அமெரிக்காவும் முக்கிய ஐரோப்பிய நாடுகளும் தங்களது இழப்புகளுக்குரிய 'பில்' லை சீனாவிடம் கொடுக்கத் தயாராகின்றன போலத் தெரிகின்றது.

பூகோள ரீதியான இந்த மாபெரும் அவலத்துக்கு தனியே சீனாவை மட்டும் பொறுப்புக் கூறுவதை ஐ. நா. சபை ஏற்றுக்கொள்ளுமா என்பது தெரியவில்லை.

இது விடயத்தில் சர்வதேச ரீதியான விசாரணை ஒன்று பின்னராக நடத்தப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். ஆயுத பரிசோதனைகளுக்காக அனுமதி இன்றியே நாடுகளுக்குள் இறங்குவதற்கு ஐ. நா. குழுக்களுக்கு அதிகாரம் உள்ளது. அதேபோன்று வைரஸ் பரிசோதனைகளுக்காகவும் நாடுகளுக்குள் குழுக்களை அனுப்ப உலக சுகாதார நிறுவனத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்கிறது ஆஸ்திரேலியா.

சர்வதேச விசாரணை ஒன்றை ஆரம்பிப்பது பற்றி வல்லரசு நாடுகளின் தலைவர்களோடு ஆஸ்திரேலியா ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளது. வைரஸின் மூலம் எது என்பது இத்தகைய விசாரணைகளில் தெரிய வரலாம். ஆனால் அதற்குள் அடுத்தடுத்துப் பல அலைகளாக இந்த வைரஸின் அழிவுகளை உலகம் சந்தித்தே ஆகவேண்டி இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

வைரஸ் வெளவால்களில் இருந்தாலும் சரி ஆய்வு கூடத்தில் இருந்தாலும் சரி அது மனிதர்களிடம் தொற்றுவதற்கு மனிதரே காரணம் என்பதைத்தான் எந்த விசாரணைகளும் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்போகின்றன. அதில் சீனர்கள், அமெரிக்கர்கள் என்பன போன்ற தேச வேறுபாடுகள் இருக்கப் போவதில்லை.

அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்காவது இந்த வைரஸோடுதான் வாழ்க்கை என்று உலகத் தலைவர்கள் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே வாழப்பழகுவோம் வைரஸ்களோடு, வேறு வழியே இல்லை.

# வடக்கில் முதன்முறையாக ‘லங்கா ஜம்போ’ நிலக்கடலை

கிளிநொச்சி, ஏப்.25

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக விவசாயிகளின் வயலில் 'லங்கா ஜம்போ' இன நிலக்கடலை விதை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி திருவையாறு கனகாம்பிகைகுளம் ஆகிய கிராமங்களில் 'லங்கா ஜம்போ நிலக்கடலை விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான உபகரணங்களே நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. விவசாயத்தை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஜம்போ நிலக்கடலை விதை கடந்த மாதம் வழங்கப்பட்டு விவசாயிகளால் விதைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்குத் தேவைவான உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் அந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் ஜிப்சம் மற்றும் மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டது. நிகழ்வின் பிரதம விருந்தினராக இத்திட்டத்தின் மாகாண பிரதி பணிப்பாளர் க.பத்மநாதன் ,விவசாய ஆலோசகர் திரு.விஜிதன், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன், மாவட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் திருமதி.இ.மாலினி, பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி.ப.மீனலோஜினி மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-222)





# மரக்கறிகளில் சிற்பம்

கொழும்பு, ஏப்.25

ஈழத்தில் பிரபலமான சிற்பக் கலைஞர் நெடுந்தீவு மகேஸ் பார்த்தீபன் மரக்கறி மற்றும் பழங்களில் சிற்பங்களைச் செதுக்கி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளார்.

அவரது சிற்பங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்று வருகின்றன. மரவள்ளிக் கிழங்கு, வற்றாளங் கிழங்கு, கத்தரிக்காய், பழங்களின் தோல் என்பவற்றைக் கொண்டு பல சிற்பங்களை அவர் உருவாக்கியுள்ளார். அவற்றை சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளார். அவரது சிற்பங்களுக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (க)

# மதுபானசாலை உடைப்பு முயற்சி பிசுபிசுப்பு

ஹற்றன், ஏப்.25

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா காசல்ரீ பகுதியில் உள்ள மதுபானசாலை ஒன்றை உடைத்து திருட முற்பட்ட போது, மக்கள் சத்தமிட்டதால் உடைக்க முற்பட்ட நபர் தப்பி ஓடியுள்ளார் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மதுபானசாலையினை உடைத்து, உட்புகுந்து சென்று, மதுபானசாலையில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.டிவி கமராவை மறு புறமாக திருப்பி வைக்கும் காட்சிகள் அங்கு பொருத்தப்பட்டிருந்த கமராவில் பதிவாகியுள்ளன. எனினும் மதுபானசாலைக்குள் உட்புகுந்த சந்தேக நபர் எவ்வித மதுபான போத்தல்களையோ பணத்தையோ கொள்ளையடித்து செல்லமுடியாமல் போய்விட்டது என்றும் ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது .

சீ.சீ.டிவி காணொளிகளை வைத்து, தப்பி ஓடிய சந்தேக நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மொத்தம் நான்கு மதுபானசாலைகள் இதுவரை காலப்பகுதியில் உடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ( ந-114)

# விமான சேவைகள் மீண்டும் நிறுத்தம்



கொழும்பு, ஏப்.25

ஸ்ரீலங்கன் விமான சேவையின் அனைத்துப் பயணிகள் விமான சேவைகளும் தொடர்ந்தும் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 15 ஆம் திகதி வரை தொடர்ந்து விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் விமானப் போக்குவரத்துகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (க)

# தனியார் மருத்துவமனைகளின் பங்களிப்புக்குக் கரு பாராட்டு!

கொழும்பு, ஏப்.25

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளின் அளவை அதிகரிப்பதில் தாமதமாகவேனும் தனியார் மருத்துவமனைகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமென்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றாளர்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளும் எண்ணிக்கையை அதிகரிப்பது மிகவும் அவசியமென வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், அதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதுகுறித்து முன்னாள் சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டுக்குள் கொரோனா வைரஸ் சமூகப்பரவல் நிலை ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. பரிசோதனைகள் மேற்கொள்ளும் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்பதுடன், ஏற்கனவே தாமதமாகவேனும் தற்போது தனியார் மருத்துவமனைகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேபோன்று நாட்டை மீளத்திறக்கும் போது மிகவும் கவனமாக செயற்பட வேண்டுமென்பதுடன், அத்தியாவசியத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலான செயற்திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்வதும் அவசியமாகும் - என்றார். (ஐ)

# அரச அலுவலகங்களுக்கு வருவோரது வெப்ப நிலையை அளக்கத் திட்டம்



மட்டக்களப்பு, ஏப்.25

அரசின் அறிவுறுத்தல்களுக்கமைவாக மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சமுகமளிக்கும் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்களின் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டச் செயலர் திருமதி. கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டலில் அலுவலகங்களுக்கு வருகை தருபவர்களின் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்படும்போது அவர்களின் உடல் வெப்பநிலை அதிகரித்திருக்குமாயின், கொரோனாத் தொற்று அறிகுறிகளில் ஒன்றான காய்ச்சல் காணப்படலாம் என்ற அடிப்படையில் அலுவலகத்துக்குள் அனுமதிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் பயன்படுத்துவதற்காக வெப்ப அளவீட்டுக் கருவிகள் நேற்று மாவட்டச் செயலகத்தில் வைத்து அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

கொரோனாத் தொற்றுப் பரவாமலிருக்க சுகாதாரப் பிரிவால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் அரசால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களையும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அதை மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்குரியது எனவும் இதன் போது மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ப)

# சட்ட மா அதிபர் திணைக்களத்தை திறக்க கோரிக்கை

கொழும்பு, ஏப். 25

சட்ட மா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றும் தனியார் பாதுகாப்பு அலுவலர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், சட்ட மா அதிபர் திணைக்களத்தை மீண்டும் திறப்பதற்கு சட்ட மா அதிபர் உரிய அதிகாரிகளிடம் அனுமதி கோரியுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் உள்ளிட்டோருக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மாவர்தன மின்னஞ்சல் மூலமாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும் திணைக்களத்தை திறப்பது மற்றும் அங்கு அதிகாரிகள் செல்வது ஆகியன பாதுகாப்பானதா என்று அறிவிக்குமாறு குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சட்ட மா அதிபர் திணைக்கள பாதுகாப்பு ஊழியர்களுக்கு உணவு வழங்கும் பாதுகாப்பு அலுவலரான பெண் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பதும், அவருடன் நெருக்கமாகச் செயற்பட்ட மற்றொரு ஆண் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்டோர் அங்கு இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த 7 அலுவலர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# அரசமைப்புக்கு வெளியே செல்லத் தேவையில்லை!

## மகாசங்கத்தினர் தெரிவிப்பு

கொழும்பு. ஏப்.25

அரசியலமைப்புக்கு வெளியே எந்தவொரு தீர்மானத்துக்கும் வரவேண்டியதில்லை என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் மகாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் ஒழிப்புத் தொடர்பில் அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், மூன்று நிகாயக்களையும் சேர்ந்த மகாசங்கத்தினருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து மகா சங்கத்தினரினதும் முழுமையான ஆசிர்வாதம் ஜனாதிபதி தலைமையிலான அரசு முன்னெடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு உள்ளது. பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி நாட்டை குழப்பமான நிலைக்கு உள்ளாக்க வேண்டியதில்லை. பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டக்கூடாது என்பது மகா சங்கத்தினரின் ஏகமனதான தீர்மானம் என்று மகா சங்கத்தினர் இதன்போது தெரிவித்தனர்.



இதில் முன்னர் இருந்த நாடாளுமன்றம் நாட்டின் தற்போதைய நிதிப் பிரச்சினைக்கு வகைகூற வேண்டும் என்று மல்வத்தை பீடத்தின் அநுநாயக தேரர் சங்கைக்குரிய நியங்கொட விஜித சிறி தேரர் குறிப்பிட்டார்.

வைரஸ் ஒழிப்புக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நோக்கும் போது புதியதொரு சிந்தனையொன்று நாட்டில் நடைமுறையாவது தெளிவாகிறது. அது 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திற்கு 'சுபீட்சத்தின் சிந்தனை' என இணைக்கப்பட வேண்டிய உப பிரிவாகும் என அமரபுர ஸ்ரீ தர்மரக்சித நிகாயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திருக்குணாமலயே ஆனந்த தேரர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் ஒழிப்பில் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களில் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பாடம் கற்றுக்கொள்ள முடியும் என்று பேராசிரியர் சங்கைக்குரிய மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டார். நாட்டின் இளைய தலைமுறை மற்றும் பல்வேறு குழுக்கள் பல புத்தாக்கங்களை செய்துள்ளனர்.

அவை எதிர்காலத்திற்கு வழிகாட்டும் பொன்னான சந்தர்ப்பம் என்றும் ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மகா சங்கத்தினர் தொடர்ந்தும் பலமாக இருப்பார்கள் என்றும் தேரர் குறிப்பிட்டார். (ப)

# மீளவும் சத்திர சிகிச்சைகள்

கொழும்பு, ஏப்.25

நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, சத்திர சிகிச்சைகள் மற்றும் கிளினிக் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான சுற்றுநிருபம் சகல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இது குறித்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (க)

# 54,000 பட்டதாரிகளுக்கு விரைவில் கொடுப்பனவு

## அரசு உடும்புப்பிடி

கொழும்பு, ஏப்.25

அரசால் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட 54 ஆயிரம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான கொடுப்பனவு இதுவரை கிடைக்காதவர்களுக்கு, அதனைத் துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உயர் கல்வி, தொழில் நுட்பம், புத்தாக்கம், தகவல் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இதுவரையில் இந்தியாவுக்கு மாத்திரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்புடன் 580 இலங்கை மாணவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். இதற்கமைவாக கட்டம் கட்டமாக அனைத்து நாடுகளிலும் உள்ள மாணவர்கள் மற்றும் தொழிற்துறையினர் நாட்டுக்கு அழைத்து வரப்படுவர். இதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மூலம் விசேட இணையத்தளமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படும். நாட்டுக்குத் தேவையான நிதியைச் செலவிடுவது தொடர்பில் அரசமைப்பு ரீதியான எந்த நெருக்கடி நிலையும் ஏற்படவில்லை. புதிய நாடாளுமன்றம் தெரிவாகி மூன்று மாதங்கள் வரை எந்தவித கடன் எல்லையுமின்றி எந்தச் செலவும் செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதியைத் தவிர வேறு எவருக்கும் எந்தக் காரணம் கொண்டும் மீளக் கூட்ட முடியாது. அவசரகாலச் சட்டத்தை அறிவிக்கவும், அதனைத் திருத்தவும் மாத்திரமே அவரால் நாடாளுமன்றத்தை மீள கூட்ட முடியும். வேறு எக்காரணத்துக்காகவும், நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது. மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான எந்த தேவையும் கிடையாதென ஜனாதிபதி கூறியுள்ளார். என்றார். இதேவேளை தேர்தல் சட்டம் நடைமுறையில் உள்ளதால், பட்டதாரிப் பயிலுநர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கக் கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அதனையும் மீறியே அவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதில் அரசு விடாப்பிடியாக நிற்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சுவாச நோயாளிகளுக்கு கொரோனாச் சோதனை

கொழும்பு, ஏப்.25

வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுகளுக்கு வரும், சுவாசப் பிரச்சினை உள்ள நோயாளிகளின் மாதிரிகளைப் பெற்று கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதான தொற்றுநோய் தடுப்பு விசேட வைத்தியர் சுகத் சமரவீர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அடுத்த வாரத்திலிருந்து 15 பிரதான வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா தொடர்பான 12 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

தேவைகளுக்கு அமைவாக பரிசோதனைகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 25.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.